**Judicial Form No.53**
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
**(Chapter XXII, Cr.P.C.)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 55 of 2020

Depositions of PW -1 witness for ________ Prosecution / Defence / Court

Name : டாக்டர் திரு.எம். சந்திரசேகரன்

Father's Name :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th **day of June** 2025.

**(1 ம் முதல் 3 ம் எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

அரசு தரப்பில் முதல் விசாரணை

1. நான் சென்னை மருத்துவம் மற்றும் ஊரக நல பணிகள் உதவி கூடுதல் இயக்குனராக பணி செய்து ஓய்வு பெற்றுள்ளேன். நான் தற்பொழுது கும்பகோணம் தனியார் மருத்துவமனையில் மருத்துவராக பணி செய்து வருகிறேன். நான் கடந்த 2017 ஆம் வருடம் ஆகஸ்ட் 4 ஆம் தேதி கோவை மாவட்டம் இணை இயக்குநராக பணி செய்தபோது கோவை மாவட்ட ஆட்சித்தலைவரின் வாய்மொழி உத்தரவின் அடிப்படையில் மருத்துவர் இல்லாமல் இயங்கி வரும் முகவை மெடிக்கல் சென்டர் மற்றும் மருத்துவமனையை ஆய்வு செய்யுமாறு பணிக்கப்பட்டேன்.

2. கடந்த 04.08.2017 ம் தேதி காலை 11:15 மணிக்கு எங்கள் குழுவினர் கருமத்தம்பட்டியில் இருந்த உள்ள முகவை மருத்துவமனை மற்றும் மெடிக்கல் சென்டர் ஆய்வு

செய்தேன். அங்கு வெளி நோயாளிகள் பிரிவில் மருத்துவர் ஒருவர் இருந்தார். உள் நோயாளி பிரிவுகளில் மருத்துவர்கள் யாரும் இல்லை. மருத்துவர்கள் அங்கு வந்து உள் நோயாளிகளை பார்வையிட்டதற்கான எந்த மருத்துவ ஆவணங்களும் நாங்கள் ஆய்வின் பொழுது சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் காய்ச்சல் நோயாளி ஒருவர் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தார். அவரை அனுமதித்ததற்கான அனுமதி சீட்டோ அல்லது மருத்துவர் அறிவுரை கோப்போ எதுவும் இல்லை.

3. மேலும் அந்த நாட்களில் டெங்கு மற்றும் மரணங்கள் நோய்களால் ஏற்பட்டிருந்த காலம் என்பதால் காய்ச்சல் நோயாளிகளை குறித்த அறிக்கைகளை அரசுக்கு தெரியப்படுத்தியதற்கான எந்த ஆவணங்களும் இல்லை மேலும் காய்ச்சல் நோயாளிகளை அவர்களுக்கு அளிக்க வேண்டிய சிகிச்சை முறைகளும், அவர்களுக்கு எடுக்கப்பட வேண்டிய இரத்த பரிசோதனைகளும் எதுவும் செய்யப்பட்டதற்கான எந்த மருத்துவ ஆவணங்களும் இல்லை. மேலும் மேற்படி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பகுதி மற்றும் அறுவை சிகிச்சை அரங்கு போன்றவற்றின் அறிக்கை பலகைகள் மட்டும் இருந்தது.

4. மேலும் தீவிர அறுவை சிகிச்சை பகுதிக்கு தேவையான மின்வெட்டு நேரங்களில் தேவைப்படும் ஜெனரேட்டர் எதுவும் இல்லை. அப்பொழுது அங்கு இருந்த ஊழியர்களை நான் விசாரித்த பொழுது மேற்படி மருத்துவமனையை காசிலிங்கம் என்பவர் நடத்தி வருவதாகவும் மருத்துவமனைக்கு எந்த மருத்துவர்களும் வருவது இல்லை எனவும் என்னிடத்தில் கூறினார்கள். அப்பொழுது அங்கு தவமணி, செல்லம்மாள் மற்றும் நிஜந்தன் ஆகியோர்கள் ஊழியர்களாக இருந்தார்கள். மேலும் மேற்படி மருத்துவமனையில் தகுதி படைத்த செவிலியர்கள் மருந்து ஆளுநர்களோ யாரும் இல்லை. எனவே நான்கு பேரும் மீதும் நடவடிக்கை எடுக்கும்படி நான் எழுத்து மூலமாக புகார் கருமத்தம்பட்டி காவல் நிலையத்தில் கொடுத்தேன். என்னிடம் கட்டப்படும் புகார் என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டதுதான். புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1 முதல் 3 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணைக்கு போதைய வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை மேற்கொள்ளவில்லை.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.06.26 19:05:30 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**

**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | } | Case No. CC 55 of 2020 |

Depositions of PW -2 witness for ________ { Prosecution / Defence / Court

Name : டாக்டர் திரு.எம். வெங்கடேஷ்

Father's Name :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th **day of June** 2025.

**(1 ம் முதல் 3 ம் எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்பொழுது கோவை மாவட்டம் இணை இயக்குனர் சுகாதாரப் பணிகள் அலுவலகத்தில் தேசிய சுகாதாரக் குழுமம் ஒருங்கிணைப்பாளர் மற்றும் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 04.08.2017 ம் தேதி இணை இயக்குனர் அவர்களின் உத்தரவுப்படி கருமத்தம்பட்டியில் உள்ள முகவை மருத்துவமனை ஆய்வுக்கு செல்ல குழுவில் ஒருவராக அழைக்கப்பட்டேன். மேலும் அன்றைய தினமே முகவை மெடிக்கல் சென்டர் மருத்துவமனைக்கு காலை சுமார் 11- 1/4 மணி அளவில் ஆய்வுக்கு சென்றேன். அப்பொழுது இணை இயக்குனர் மற்றும் குழுவில் இருந்த நாங்கள் ஆய்வு மேற்கொண்டோம். மேற்படி காலகட்டத்தில் டெங்கு மற்றும் காய்ச்சல் அதிகப்படியாக மக்கள் அவதிக்கு உள்ளாக்கப்பட்டு இருந்த காலம் என்பதால்

மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் காய்ச்சல் நோயாளிகளுக்குரிய சிகிச்சை அளிக்கப்பட்டு மேலும் அவ்வாறு சிகிச்சையில் இருக்கும் நபர்களுக்கு டெங்கு போன்ற நோய்கள் ஏதேனும் இருந்தால் மேற்படி விபரத்தை அரசுக்கு உடனடியாக தெரியப்படுத்த வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் அங்கு சிகிச்சை அளித்த நோயாளிகளின் விபரங்கள் மற்றும் மருத்துவ குணங்கள் எதுவும் இல்லை. மேலும் அங்கு மருத்துவர்கள் யாரும் இல்லாமல் சிகிச்சை அளித்த விவரம் இயக்குனர் விசாரித்த பொழுது நானும் உடன் இருந்தேன்.

3. மேலும் உள் நோயாளிகள் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பெற்றதற்கான எந்த மருத்துவ ஆவணங்களும் பராமரிக்கப்படவில்லை எங்கள் ஆய்வின்பொழுதும் சமர்ப்பிக்கவில்லை. மேலும் பதிவு பெற்ற மருத்துவர்கள் மருத்துவமனையில் இருந்ததற்கான எந்த ஆவணங்களும் இல்லை. இது சம்பந்தமாக இணை இயக்குனர் அவர்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

1 முதல் 3 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணைக்கு போதைய வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை மேற்கொள்ளவில்லை.

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.06.26 19:05:36 +0530

**மறுவிசாரணை** இல்லை

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**